**சுருக்கம்**

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை – பணியமைப்பு 2014–2015–ஆம் ஆண்டு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை மானியக் கோரிக்கை –மாண்புமிகு அமைச்சர் (ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம்) அவர்களின் அறிவிப்புகள் – நீலகிரி மாவட்டம், குன்னூர் மற்றும் கூடலூர் கோட்டங்களில் ஆதிதிராவிடர் நல தனி வட்டாட்சியர் அலுவலகம் தோற்றுவித்தல் – ஆணைகள் – வெளியிடப்படுகின்றன.

---

**ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்(ஆதிந–1) துறை**

அரசாணை (ப) எண். 103

நாள்: 28.04.2015
திருவள்ளுவர் ஆண்டு 2046
**மன்மத வருடம்**
சித்திரை மாதம் 15 – ஆம் நாள்
படிக்கப்பட்டது :

1. பழங்குடியினர் நல இயக்குநரின் கடிதம் ந.க.எண்.பமே/அ3/1096/2014 நாள்.01.08.2014, 02.09.2014.
2. கூடுதல் தலைமைச் செயலாளர் / வருவாய் நிர்வாக ஆணையரின் கடித எண். பணி 6(3)/48686/2014, நாள் 30.12.2014.

---

**ஆணை :**

மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அமைச்சர் அவர்கள் 22.07,2014 அன்று சட்டமன்றப் பேரவையில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின், 2014–2015–ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கை விவாதத்திற்கு பதில் அளிக்கையில் 13 புதிய அறிவிப்புகளை வெளியிட்டார்கள். அவற்றில் கீழ்க்காணும் அறிவிப்பும் அடங்கும்:–

> "நீலகிரி மாவட்டத்தில் 32,813 பழங்குடியின மக்கள் வசிக்கின்றனர். மாவட்ட தலைமையகமான உதகமண்டலத்திலிருந்து குன்னூர் மற்றும் கூடலூர் பகுதிகள் 40 கி.மீ. தொலைவில் உள்ளதால் மக்கள் நல அரசுத் திட்டங்கள் பழங்குடியின மக்களை எளிதில் சென்றடைய **மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி,** குன்னூர் மற்றும் கூடலூர் பகுதிகளுக்கு தனி வட்டாட்சியர் அலுவலகம் புதியதாகத் தோற்றுவிக்கப்படும். இதற்கு ஆண்டொன்றுக்கு ரூ.40.00 இலட்சம் செலவினம் மேற்கொள்ளப்படும்".

2. மேற்கண்ட புதிய அறிவிப்பு தொடர்பாக மேலே முதலாவதாக படிக்கப்பட்ட கடிதத்தில் பழங்குடியினர் நல இயக்குநர், நீலகிரி மாவட்டத்தில் குன்னூர் மற்றும் கூடலூர் என இரண்டு வருவாய் கோட்டங்கள் இயங்கி வருகின்றன எனவும், இம்மாவட்டத்தில் மொத்தம் 32,813 பழங்குடியினர் வசித்து வருகின்றனர் எனவும், குன்னூர் கோட்டத்தின் கீழ் குன்னூர், கோத்தகிரி மற்றும் குந்தா வட்டங்களும், கூடலூர் கோட்டத்தின் கீழ் கூடலூர், பந்தலூர் ஆகிய வட்டங்களும்

(த.பி.பா)

இயங்கி வருகின்றன எனவும், நீலகிரி மாவட்டத்தில் தோடா, குரும்பாஸ், கோத்தா, இருளர், பணியன் மற்றும் காட்டுநாயகன் ஆகிய பழங்குடி இனத்தினர் வசித்து வருகின்றனர் எனவும் தெரிவித்துள்ளார்.

3. மேலும், கூடலூர் கோட்டத்திற்கு கூடலூரிலும், குன்னூர் கோட்டத்திற்கு கோத்தகிரியிலும் இரண்டு தனிவட்டாட்சியர் அலுவலகங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு ஒரு வட்டாட்சியர் அலுவலகத்திற்கு 6 பணியிடம் வீதம், 12 பணியிடங்களுடன் ஏற்படுத்தி அவற்றை ஆதிதிராவிடர் நல இயக்குநரின் கட்டுப்பாட்டின் கீழ் பழங்குடியினர் நலத் திட்டங்களுடன் ஆதிதிராவிடர் நலத் திட்டங்களையும் நடைமுறைபடுத்தும் வகையில் அரசாணை வெளியிடுமாறு பழங்குடியினர் நல இயக்குநர் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

| | | |
|---|---|---|
| 1. | தனிவட்டாட்சியர் | 1 |
| 2. | உதவியாளர் (வருவாய் ஆய்வாளர் நிலையில்) | 1 |
| 3. | இளநிலை உதவியாளர் | 1 |
| 4. | தட்டச்சர் | 1 |
| 5. | அலுவலக உதவியாளர் | 1 |
| 6. | ஈப்பு ஓட்டுனர் | 1 |
| | **மொத்தம்** | **6** |

4. மேலே 2–வதாக படிக்கப்பட்ட கடிதத்தில், பழங்குடியினர் நல இயக்குநரின் பரிந்துரையின் அடிப்படையில், கூடலூர் மற்றும் கோத்தகிரி வட்டங்களில் வசிக்கும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் இனத்தைச் சார்ந்த மக்கள் ஆதிதிராவிடர் நலத் திட்ட உதவிகள் மற்றும் இதர பயன்கள் பெற ஆதிதிராவிடர் நல தனிவட்டாட்சியர் அலுவலகங்கள் அமைக்கலாம் எனவும், அவ்வாறு ஆதிதிராவிடர் நல தனிவட்டாட்சியர் அலுவலகம் தோற்றுவிக்கும் போது கீழ்கண்டவாறு 9 பணியிடங்கள் ஒப்பளித்து அரசால் ஆணையிடப்படுகிறது என்றும், அதனடிப்படையில் புதியதாக உருவாக்க உத்தேசிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு ஆதிதிராவிடர் நல தனி வட்டாட்சியர் அலுவலகத்திற்கும் 9 பணியிடங்கள் வீதம் 18 பணியிடங்களுடன் இரு ஆதிதிராவிடர் நலத்துறை தனிவட்டாட்சியர் அலுவலகங்கள் அமைக்கலாம் எனவும் கூடுதல் தலைமைச் செயலர்/வருவாய் நிருவாக ஆணையர் தெரிவித்துள்ளார்கள்:-

| | | |
|---|---|---|
| (1) | தனி வட்டாட்சியர் (ஆதிந) | 1 |
| (2) | உதவியாளர் | 1 |
| (3) | உதவியாளர் ( வருவாய் ஆய்வாளர் நிலை) | 1 |
| (4) | இளநிலை உதவியாளர் | 2 |
| (5) | சார் ஆய்வாளர் | 1 |
| (6) | புல உதவியாளர் | 1 |
| (7) | தட்டச்சர் | 1 |
| (8) | அலுவலக உதவியாளர் | 1 |
| | **மொத்தம்** | **9** |

(த.பி.பா)

5. மாண்புமிகு அமைச்சர் (ஆதி(ம)பகுந) அவர்களின் மேலே பத்தி 1-ல் குறிப்பிட்டுள்ள அறிவிப்பு தொடர்பாக பெறப்பட்ட பழங்குடியினர் நல இயக்குநரின் கருத்துரு மற்றும் அக்கருத்துரு மீதான கூடுதல் தலைமைச் செயலாளர்/ வருவாய் நிருவாக ஆணையரின் கருத்துரை ஆகியவற்றை அரசு கவனமுடன் பரிசீலித்தது. அதனடிப்படையில், 2014-2015 ஆம் ஆண்டிற்கான புதிய அறிவிப்பினை செயல்படுத்தும் வகையில், பழங்குடியினர் நல இயக்குநரின் கோரிக்கையினை ஏற்று, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் திட்டங்களை நடைமுறைப்படுத்த நீலகிரி மாவட்டத்தில் கூடலூர் கோட்டத்திற்கு கூடலூரிலும், குன்னூர் கோட்டத்திற்கு கோத்தகிரியிலும் ஆதிதிராவிடர் நல தனிவட்டாட்சியர் அலுவலகங்கள் ரூ.68,53,416 செலவினத்தில், (தொடரும் செலவினம் ரூ.53,53,416 மற்றும் தொடரா செலவினம் ரூ.15,00,000) கீழ்க் குறிப்பிடப்பட்ட பணியிடங்களுடன் தோற்றுவித்து அரசு ஆணையிடுகிறது:-

| | | |
|---|---|---|
| 1. | தனிவட்டாட்சியர் | 1 |
| 2. | உதவியாளர் | 1 |
| 3. | இளநிலை உதவியாளர் | 1 |
| 4. | தட்டச்சர் | 1 |
| 5. | அலுவலக உதவியாளர் | 1 |
| 6. | ஈப்பு ஓட்டுனர் | 1 |
| | மொத்தம் | 6 |

மேலும், கூடுதல் தலைமைச் செயலாளர்/ வருவாய் நிருவாக ஆணையரால் கருத்துரைக்கப்பட்ட கூடுதல் பணியிடங்களான உதவியாளர்-1, இளநிலை உதவியாளர்-1, சார் ஆய்வாளர்-1, புல உதவியாளர்-1 ஆகிய 4 (நான்கு) பணியிடங்களின் தேவையினைப் பொறுத்தும், பழங்குடியினர் நல இயக்குநரின் கருத்தினைப் பெற்றும் மேற்படி 4 கூடுதல் பணியிடங்களை பின்னாளில் தோற்றுவிக்கலாம் எனவும் அரசு கருதுகிறது.

6. மேலே பத்தி 5-ல் தோற்றுவிக்கப்பட்ட ஆதிதிராவிடர் நல தனிவட்டாட்சியர் அலுவலகங்களுக்கான புதிய பணியிடங்கள் தொடர்பான தொடரும் மற்றும் தொடராச் செலவினம் குறித்த விவரங்கள் இவ்வாணையின் இணைப்பு I, II மற்றும் III-ல் கொடுக்கப்பட்டுள்ளன. இச்செலவினம் மேலே பத்தி 5-ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் "புதுத் துணைப் பணிகள்" குறித்த செலவினமாகும். இதற்காக சட்டப் பேரவையின் ஒப்புதல் பின்னர் பெறப்படும். சட்டப் பேரவையின் ஒப்புதலை பெறுவதை எதிர்நோக்கி இத்திட்டத்திற்கான ஆரம்ப செலவினத்தை எதிர்பாரா செலவு நிதியிலிருந்து முன் பணமாக பெற்று செலவிடப்படும். இதற்கான ஆணை நிதி (வ.செ -1) துறையில் தனியாக வெளியிடப்படும். எதிர்பாரா செலவு நிதியிலிருந்து தேவையான முன்பணம் பெற வரையறுக்கப்பட்ட படிவத்தில் இவ்வரசாணையின் நகலினையும் இணைத்து நிதி (வ.செ -I) துறைக்கு விண்ணப்பிக்குமாறு இயக்குநர், பழங்குடியினர் நலத் துறை அவர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார். மேலும், பழங்குடியினர் நலத் துறை இயக்குநர் அவர்கள் இச்செலவினத்தை துணை மதிப்பீடுகள் 2015-2016-ல் சேர்ப்பதற்கான கருத்துருவினை உரிய நேரத்தில் தவறாது நிதி (ஆதி(ம)பந/ (வ.செ.பொ.1) துறைக்கு அனுப்பிடுமாறு அறிவுறுத்தப்படுகிறார்.

(த.பி.பா)

கீழ்க்காணும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:–

2225 ஆதிராவிடர், பழங்குடியினர் மற்றும் ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் –80– பொது – 001 நெறிப்படுத்துதலும், நிருவாகமும் –I திட்டத்தில் சேராதது – AA ஆதி திராவிடர், பழங்குடியினர் நலத்துறை மாவட்டப் பணியாளர்கள்.

| | |
|---|---|
| **01. சம்பளங்கள்** | |
| 01. அடிப்படைச் சம்பளம் (து.தொ.கு.2225 80 001 AA 0114) | ரூ.23,19,600/– |
| 02 மருத்துவப்படி (து.தொ.கு.2225 80 001 AA 0123) | ரூ.14,400/– |
| 06 வீட்டு வாடகைப் படி (து.தொ.கு.2225 80 001 AA 0169) | ரூ.1,04,160/– |
| **03. அகவிலைப்படி** | |
| 01 அகவிலைப்படி (து.தொ.கு.2225 80 001 AA 0310) | ரூ.24,81,984/– |
| **05. அலுவலகச் செலவுகள்** | |
| 01 தொலைபேசிக் கட்டணங்கள் (து.தொ.கு.2225 80 001 AA 0516) | ரூ.60,000/– |
| 05 அறைகலன் (து.தொ.கு.2225 80 001 AA 05) | ரூ.2,00,000/– |
| **06. வாடகை, கட்டண வீதங்கள்–வரிகள்** | |
| 01. வாடகை (து.தொ.கு.2225 80 001 AA 0614) | ரூ.2,40,000/– |
| **21. மோட்டார் வண்டிகள்** | |
| 01 வாங்குதல் (து.தொ.கு.2225 80 001 AA 2112) | ரூ.11,00,000/– |
| 45. பெட்ரோலியம், எண்ணெய் மற்றும் மசக்கெண்ணெய் (து.தொ.கு.2225 80 001 AA 4503) | ரூ.1,33,272/– |
| **76. கணினியும் துணைப் பாகங்களும்** | |
| 01 வாங்குதல் (து.தொ.கு.2225 80 001 AA 7617) | ரூ.2,00,000/– |

(து.பி.பா)

7. இவ்வாணை நிதித்துறையின் அலுவல் சார்பற்ற எண். 23882/மைமஆபி/2015, நாள் 24.04.2015 -ல் பெறப்பட்ட இசைவுடனும் மற்றும் கூ.பே.எண். 148 (நூற்று நாற்பத்து எட்டு) உடனும் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**பொ. சிவசங்கரன்**
அரசு முதன்மைச் செயலாளர். (கூ.பொ.)

<u>பெறுநர்</u>
கூடுதல் தலைமைச் செயலாளர்/ வருவாய் நிருவாக ஆணையர், சென்னை –5.
இயக்குநர், ஆதிதிராவிடர் நலத்துறை, சென்னை-05.
இயக்குநர், பழங்குடியினர் நலத்துறை, சென்னை-05.
மாநில கணக்காய்வுத் தலைவர், சென்னை-06/18/35
மாவட்ட ஆட்சித் தலைவர், நீலகிரி.
மாவட்ட ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர், நீலகிரி.
மாவட்ட கருவூல அலுவலர், நீலகிரி.
<u>நகல்:</u>
நிதி (ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம் / வரவு–செலவு–பொது–II/ வரவு–செலவு பொது –I)த்துறை, சென்னை-09.
மாண்புமிகு அமைச்சர் (ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம்) அவர்களின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை–09.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை செயலாளர் அவர்களின் நேர்முக உதவியாளர், சென்னை-09.
சிறப்பு முயற்சிகள் மற்றும் திட்ட செயலாக்கத்துறை, சென்னை–09.
இருப்புக்கோப்பு/உதிரி.

//உண்மை நகல்//

பிரிவு அலுவலர்.

## இணைப்பு –I

(அரசாணை(ப) எண்.103, ஆதி(ம)பநத் துறை நாள். 28 .04.2015)

**சம்பளம் குறித்த இனத்தில் ஒரு அலுவலகத்திற்கான தொடரும் செலவின விவரம்**

| வ.எண். | பணியிடம் | ஒரு மாதத்திற்கான செலவினம் (ரூ.) | ஓர் ஆண்டிற்கான செலவினம் (ரூ.) |
|---|---|---|---|
| 1 | தனிவட்டாட்சியர் (ரூ.9300–34800+தர ஊதியம் ரூ. 5100) | 57301 | 687612 |
| 2 | உதவியாளர் (ரூ.5200–20200 + தர ஊதியம் ரூ. 2800) | 32945 | 395340 |
| 3 | இளநிலை உதவியாளர் (ரூ.5200–20200 + தர ஊதியம் ரூ. 2400) | 32117 | 385404 |
| 4 | தட்டச்சர் (ரூ.5200–20200 +தர ஊதியம் ரூ. 2400) | 32117 | 385404 |
| 5 | ஈப்பு ஓட்டுநர் (ரூ.5200–20200 + தர ஊதியம் ரூ. 2400) | 32117 | 385404 |
| 6 | அலுவலக உதவியாளர் (ரூ.4800–10000 + தர ஊதியம் ரூ. 1300) | 18409 | 220908 |
| | **மொத்தம்** | **2,05,006** | **24,60,072** |

இரண்டு தனிவட்டாட்சியர் அலுவலகங்களுக்கு ஓர் ஆண்டிற்கான தொடரும் செலவினம் = ரூ.49,20,144/–

**பொ. சிவசங்கரன்**
அரசு முதன்மைச் செயலாளர். (கூ.பொ.)

// உண்மை நகல் //

[signature]
பிரிவு அலுவலர்

இணைப்பு – II

(அரசாணை(ப) எண். 103, ஆதி(ம)பந‌த் துறை நாள். 28 .04.2015)

**சம்பளம் இல்லா இனத்தில் ஒரு அலுவலகத்திற்கான தொடரும் செலவின விவரம்**

| வ.எண். | விவரம் | ஒரு மாதத்திற்கான செலவினம் | ஒரு ஆண்டிற்கான செலவினம் |
|---|---|---|---|
| 1 | கட்டட வாடகை (ரூ.10000) | 10,000 | 1,20,000 |
| 2 | டீசல் செலவினம் (90 X ரூ.61.70) | 5,553 | 66,636 |
| 3 | தொலைபேசி செலவினம் (ரூ.2500) | 2,500 | 30,000 |
| **மொத்தம்** | | **18,053** | **2,16,636** |

இரண்டு தனி வட்டாட்சியர் அலுவலகங்களுக்கு ஓர் ஆண்டிற்கான சம்பளம் இல்லா இனத்தில் தொடரும் செலவினம் = ரூ.4,33,272/–

**பொ. சிவசங்கரன்**
அரசு முதன்மைச் செயலாளர். (கூ.பொ.)

// உண்மை நகல் //

பிரிவு அலுவலர்

**இணைப்பு – III**

**(அரசாணை(ப) எண். 103, ஆதி(ம)பந நலத் துறை நாள். 28.04.2015)**

**ஒரு அலுவலகத்திற்கான தொடரா செலவின விவரம்**

| வ.எண். | விவரம் | செலவினம் (ரூ.) |
|---|---|---|
| 1 | கணினி மற்றும் பாகங்கள் | 1,00,000 |
| 2 | மரச்சாமான்கள் | 1,00,000 |
| 3 | ஈப்பு | 5,50,000 |
| **மொத்தம்** | | **7,50,000** |

இரண்டு தனிவட்டாட்சியர் அலுவலகங்களுக்கான தொடரா செலவினம் = ரூ.15,00,000/–

**பொ. சிவசங்கரன்**
அரசு முதன்மைச் செயலாளர். (கூ.பொ.)

// உண்மை நகல் //

பிரிவு அலுவலர்